# Tamil Murli Quiz 17-10-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** <u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை முடிக்கவும்:</u>
**விதவிதமான யுக்திகளை முன்வைத்து நினைவு யாத்திரையில் எதை நினைவு செய்ய வேண்டும் என்று பாபா இன்று கூறுகிறார்?**

- A. நான் மாற்றமடைய என்னுள் இன்னும் என்னென்ன குறைகள் உள்ளன என்பதை
- B. இனிமையான வீடு மற்றும் புதிய உலகம்
- C. பாபா கூறும் செய்திகளின் முக்கிய விஷயங்களை
- D. அனைவருக்கும் பாபாவின் செய்தியை எப்படி கூறுவது என்பதை

**Q.2)** <u>சரியான 2 (இரண்டு) விடைகளைத் தேர்வு செய்யவும்:</u>
**எந்த ஒரு முயற்சி இப்போது தான் நடக்கிறது. முழு கல்பத்திலும் நடப்பதில்லை ?**

- A. நினைவு யாத்திரையில் இருந்து ஆத்மாவை தூய்மையாக்கும் முயற்சி
- B. 5000 வருடத்தின் உலக நாடகத்தின் விளையாட்டை தெரிந்து கொள்ளும் முயற்சி
- C. சத்யுகத்தில் பணக்காரர்களாக இருந்த நாம் எப்படி ஏழைகள் ஆனோம் என்பதை தெரிந்து கொள்ளும் முயற்சி
- D. உலகத்தை தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாக்கும் முயற்சி

**Q.3)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**ஆத்மா __________ கேட்கிறது என்பதை உறுதியாக நினைவு செய்யுங்கள் என்று பாபா புரிய வைத்திருக்கிறார்.**

- A. சுகம், சாந்தி, சந்தோஷத்தை
- B. மோட்சத்தை
- C. இந்த கர்மயந்திரங்களின் மூலம்
- D. அமைதி மற்றும் சுகத்தை

**Q.4)** <u>சரியா? தவறா?:</u>
**பக்தி மார்கத்தில் அதிகமான சித்திரங்கள் இருக்கின்றன. சித்திரங்களை வைத்தே பக்தி முழுவதும் நடக்கிறது. உங்களுடைய சித்திரங்கள் பக்தி மார்க்கத்தை ஒப்பிடும் போது மிகக்குறைவே. ஆனால் உங்களுடைய சித்திரங்கள் அனைத்தும் உண்மையானவைகளாகும் . இதன் மூலம் நீங்கள் தவறானது என்ன, சரியானது என்ன என்பதை புரிய வைக்க முடியும்.**

- A. சரி
- B. தவறு

**Q.5)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**யார் எவ்வளவுதான் தத்துவ ஞானியாக இருந்தாலும் அல்லது பிரம்ம ஞானியாக இருந்தாலும் _________________________________ அழைத்து செல்ல முடியாது.**

- A. உடன்
- B. ஜீவன் முக்தி தாமத்திற்கு
- C. புது உலகிற்கு
- D. முக்தி தாமத்திற்கு

**Q.6)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**சூரியவம்சம்-சந்திரவம்சதிற்கு ஒரே சாஸ்திரம் தான் இருக்கிறது. அது _______________.**

- A. கீதை
- B. சனாதன தர்மத்தின் வேதம்
- C. அங்கு எந்த சாஸ்திரமும் இல்லை
- D. மனு நீதி சாஸ்திரம்

*Q.7)* <u>சரியா? தவறா? :</u>
**தேவதைகள் தூய்மையற்ற நிலையில் இருந்து தூய்மையாவதற்கு முயற்சி செய்து அந்த பதவியை அடைந்துள்ளனர்.**

A. சரி

B. தவறு

*Q.8)* <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**சாதுக்களை கடைத்தேற்றுவது கடைசியில் நடக்கும் . இப்போது அவர்கள் உங்களுடயவர்களாக ஆகி விட்டால் ____________________.**

A. முழு பக்தி மார்க்கமே முடிந்து விடும்

B. புரட்சி ஏற்பட்டு விடும்

C. சந்நியாசிகளே நாங்கள் தோற்று விட்டோம் என்று தங்களுடைய ஆசிரமத்தை விட்டு விடுவார்கள்.

D. மேலே கூறிய அனைத்தும்

*Q.9)* <u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்:</u>
**யோகம் நினைவு என்ற கவசத்தை அணிந்திருந்தீர்கள் என்றால் __________________ ஏற்படாது.**

A. மாயை என்னும் எதிரியின் சண்டை

B. எதிலும் ஏமாற்றம்

C. எப்போதும் தோல்வி

D. எதற்கும் கவலை

*Q.10)* **சரியா தவறா என்று குறிக்கவும் :**
**உலகத்தில் உள்ள குருக்களின் சீடர்கள் குருவிற்காக தங்க சிம்மாசனம், மாளிகை போன்ற பகட்டான அலங்காரங்களை உருவாக்குகிறார்கள். நீங்கள் குழந்தைகளாகவும், மாணவர்களாகவும் இருக்கிறீர்கள், ஆகவே அவருக்கு மிகவும் பகட்டான சிம்மாசனத்தை மதுபன்னில் அமைக்கிறீர்கள்.**

A. சரி

B. தவறு